# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 8 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 8**
**AUGUST 2024 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் பிரியமானவர்களே

உங்கள் அனைவருக்கும் சமாதானம் பெருவதாக.

கடந்த மூன்று மாதங்களில் மூன்று **ஆதிவாசிகள்** மிஷனரி ஊழிய பணிதளங்களுக்கு சென்று மிஷனரி குடும்பங்களை பெலப்படுத்தவும் ஆதிவாசிகள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கவும் சென்று வர வட இந்திய நீண்ட பயனத்துக்காக பெலத்தையும் ஆரோக்கியத்தையும் அருளிய கர்த்தருக்கு நன்றி ஏறெடுக்கிறேன்.

இந்திய நாட்டின் சுதந்திர தின இந்த மாதத்தில் பெற்ற சுதந்திர தினத்தை சந்தோஷமாக, சமாதானத்துடன் அனுபவிக்க முடிவில்லை. நான் சென்று வந்த வட இந்திய மாநிலங்களில் **கோமாதா பாதுகாவலர்** என்ற பெயரில் மாடு வைத்திருப்பவர்களை எல்லாம் கொடுமைப்படுத்தவும், கிராமத்தை விட்டு விரட்டியடிப்பதையும் கேள்விப்பட முடிகிறது.

ஆனால் உத்திர பிரதேசத்தில பசுவை பாதுகாக்கிறோம் என்ற பெயரில் **கோ** சாலைகளை உருவாக்கி ஆயிரக்கணக்கில் மாடுகளை பிடித்து வந்து

**AUGUST - 2024**

பாதுகாக்கிறார்கள். ஆனால் அதே **கோ** சாலையில் உள்ள மாடுகள் வெளியிடங்களுக்கு சாப்பிடும் மாடுகளாக வெட்டி வெளிநாடுகளுக்கு அனுப்பும் வியாபாரமும் பெரிய அளவில் நடத்துகிறார்கள். ஆனால் கிராமத்தில் ஒரு ஆடு வெட்டப்பட்டு கறி கடைக்கு எடுத்து செல்பவர்களை அடித்தே கொலை செய்கிறார்கள் என்ற செய்தியும் வேதனை தருகிறது.

இருமொழி கொள்கை தான் எங்களுக்கு வேண்டும். மூன்று மொழி கொள்ளையை திணிக்க வேண்டாம் என்று கூறுகிற மாநிலத்தின் சுதந்திரத்தை கெடுக்கும்படி மூன்று கொள்கை ஏற்று கொண்டால்தான் மத்திய அரசின் பண உதவி கிடைக்கும் என்று கட்டாயப்படுத்தினால் நாடு **சுதந்திரம்** பெற்று என்ன பிரயோஜனம்?

இந்தியாவில் யாருமே பேசாத எந்த மாநிலத்திலும் பயன்பாட்டில் இல்லாத **சமஸ்கிரத மொழியை** எல்லா மாநிலத்திலும் கொண்டுவர மற்ற மொழி வளர்ச்சிக்கு கொடுக்கப்படும் உதவி தொகையைவிட பண்மடங்கு பணம் பட்ஜெட்டில் ஒதுக்கியது எப்படி சுதந்திர இந்தியா ஆகும்.

திரு. மோடி அவர்களின் காவி கட்சிகள் செய்யும் அக்கிரமம் கூடி கூடி போகிறது. கடந்த ஒன்றரை வருடமாக பற்றி எரியும் **மணிப்பூருக்கு** ஒரு முறையாவது ஆறுதல் கூற நாட்டின் **பிரதமர்** என்ற முறையில் திரு. மோடி அவர்கள் இதுவரை மணிப்பூரில் தலை காட்டவில்லை. எங்கே சுதந்திரம் மணிப்பூர் இந்தியா மாநிலம் இல்லையா? கடவுள் நியாயம் தீர்ப்பார்.

## மிஷனரி ஸ்தாபனத்தை பற்றிய வாசகர்களின் கேள்வி

**கேள்வி:** ஒரு புதிய மிஷனரியை எத்தனை முறை பிரதிஷ்டை செய்யலாம்.? எத்தனை சபைகளில் பிரதிஷ்டை செய்யலாம்? இந்த கேள்வி கேட்கும் நான் போன முறை வரை ஜெப குழு தலைவனாக இருந்தேன். இந்த பிரதிஷ்டை விளையாட்டு என் உள்ளத்தை மிகவும் உருத்துகின்றது. உள்ளத்தில் குற்ற உணர்ச்சி உண்டாகிறது. நாம் பொய் சொல்கிறோமோ என்ற எண்ணம் என்னை வதைக்கிறது.

**பதில்:** இது நூற்றுக்குநூறு வெளிப்படையான **பொய் பிரதிஷ்டை தான்.** எல்லாவற்றிலும் ஆதாயம் தேடும் மினஷரி ஸ்தாபனம் நடத்துகிற மாய் மாலம் இது.

ஏற்கனவே ஒருமுறை பிரதிஷ்டை செய்யப்பட்ட அந்த புது மிஷனரி முதல் முறை பிரதிஷ்டை செய்யப்பட்டபோது உள்ளத்தில் உண்டான தெய்வப்பக்தி, முதல் முறை பிரதிஷ்டை செய்யப்பட்ட போது இருந்த **ஆவிக்குரிய தீர்மானம்** அத்தனையும் பலமுறை பிரதிஷ்டை

செய்யும் போது அவரைவிட்டு நீங்கிவிடும். **ரிஜிஸ்டர் திருமணம்** நடத்தி வைக்கும் **திருமண ரிஜிஷ்டரார்** மணமகன், மணமகளை பார்த்து இது தான் உங்களுக்கு **முதல் திருமணமா** என்று நீங்கள் **வணங்கும் தெய்வங்கள்** மீது சத்தியம் செய்வீர்களா? என்று கேட்பார். இதையே **நம் மிஷனரியை** பிரதிஷ்டை செய்ய இடம் ெ காடுத்த சபை **தலைமை பாஸ்டர்** கேட்கும் நிலை உருவானால் **இந்த பொய் பிரதிஷ்டை** நின்று போகும்.

இந்த விஷயத்தில் அந்தந்த **மிஷனரி ஸ்தாபனத்தின்** தலைவர், **பொது செயலாளர்,** ஸ்தாபனத்தை நிர்வகிக்கும் **நிர்வாகிகள்,** ஜெபகுமு **தலைவர்கள்** யாவரும் **பொய் பேசி** ஒருவருக்கு **திருட்டு திருமணம்** செய்து வைக்கும் தரகர் போல இதுதான் **முதல் திருமணம்** என்று **பொய் சொல்லி** திருட்டு திருமணத்தை நடத்தி வைப்பது போல் அமையும்.

அது போல மிஷனரி ஸ்தாபனத்தின் **தலைவர்,** பொது செயலாளர், **நிர்வாகிகள்** யாவருமே **தரகர்களாக மாறி** விடுகிறார்கள். **ஜெபகுழு தலைவர்கள்** எல்லாம் **பொய் சாட்சி கையெழுத்திடுபவர்களாகிவிடுவர்.**

அந்த **சபையின் ஆயர்** தவறான காணியாக கருதப்படும் **ஆசீர்வாத தட்டை** சபையில் அனுமதிப்பது போல் எப்படியோ **சபைக்கு பெரும் தொகை** காணிக்கையாக வருகிறது அது போதும் என்று **மிஷனரி பிரதிஷ்டையும்** நடத்த அனுமதிக்கிறார். தயவு செய்து மீதி விவரங்களை அந்தந்த மிஷனரி ஸ்தாபனத்தின் **பொது செயலாளர்,** தலைவர், **ஜெப குழு தலைவர்களிடம்** கேட்டு தெரிந்துக்கொள்ளுங்கள். இதில் **இரட்சிக்கப்பட்டேன்** என்று சாட்சி சொன்னவர்களும் **அவிசுவாசிகள் என்று கூறப்படும்** நபர்களும் ஒன்றாகிவிடுகிறார்கள் ஜெபியுங்கள்.

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# சுவிசேஷத்தை அறிந்தவர்கள் கடனாளிகள்

## அவர்கள்

# இயன்ற மட்டும் சுவிசேஷத்தை அறிவிப்பார்கள்!



**Dr. Emil Jabasingh**
*Vishwa Vani Founder*

கர்த்தருக்குள் பிரியமான தேவ ஜனங்களே, கர்த்தருக்கு நாம் "**கடனாளிகள்**" என்ற தலைப்பில் இதனை எழுதுகிறேன். அதற்கு "**நீ உனக்குச் சொந்தமல்லவே**" என்ற ஓர் கீர்த்தனை பாடலை உங்கள் நினைவிற்குக்கொண்டு வர விரும்புகிறேன். நாம் **யாருக்கு சொந்தமோ** அவருக்கு **கடனாளிகள்!** அந்தப்பாடலை எவரும் உதட்டிலிருந்து பாடலாம். ஆனால் **உள்ளத்திலிருந்து** எல்லோராலும் பாடமுடியாது! யார், யார் **இயேசுவுக்கு சொந்தமானவர்களோ** அவர்களால் மட்டுமே அந்தப் பாடலை ஆவியோடும், கருத்தோடும் பாடமுடியும்.

**பாவிகள்,** என்றும் மீட்கப்பட்ட **பாவிகள்** என்று பிரிந்து **பரலோகம்** பூலோக மனிதர்களை நிமலன் **கிறிஸ்துவை நடுவாக** வைத்து, **இரண்டாக பிரிப்பதை** அந்தப் பாடலில் பார்க்கலாம்! **ஆம் பிரித்தெடுக்கும்** அந்த பணி அன்று ஆபிராமை **ஆபிரகாம்** என்று கர்த்தர் பெயரை மாற்றியதிலிருந்து துவங்கியது.

பூர்வ கால முதல், பங்கு பங்காக வகை வகையாக மனிதர்களை **இரண்டாகப் பிரித்துக்** கொண்டே இருக்கும் கர்த்தர் தமது கிருபைக்குப் **பங்காளிகளாக மாறுகிறவர்கள்** தமக்குக் "**கடனாளிகள்**"களாக மாறிவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்!

ஆபிரகாம் உண்டாவதற்கு **முன்பே இருப்பவர்** உலகில் மேசியாவாக வெளிப்படுவதற்கு ஆதியாகமம் 12வது அதிகாரத்தில் **ஆபிரகாமைப் பிரித்தெடுத்தார்!** கர்த்தர் சொல்லுகிறது எதுவோ அதை மட்டுமே செய்யும் "**கடனாளி**"யாக பிரித்தெடுத்தார்!

அதன்படி, தான் கர்த்தருக்கே ‘‘**கடனாளி**’’ என்பதை ஆதியாகமம் 11:26 முதல் 25:11 வசனங்களில் வாழ்ந்து காட்டினார்.எனக்குக் ‘‘**கடனாளி**’’ யாக கானானை விட்டு வெளியேறு என்று கர்த்தர் அவனது 75 வது வயதில் அழைத்தார்.அன்று முதல் ஒரு முழு நூற்றாண்டு கர்த்தருக்கே ஓர் ‘‘**கடனாளி**’’யாக கடந்து வந்த பாதைகளிளெல்லாம்,சந்தித்த வேதனைகளிலெல்லாம் கர்த்தருக்குக் ‘‘**கடனாளி**’’யாக கடைசி மூச்சு வரை (175 வயது வரை - ஆதி 25:7-11) வாழ்ந்தார்.

பூலோகத்தில்‘‘**விசுவாசிகளின் தகப்பன்**’’ என்ற பட்டம் பெற்றார். பரலோகத்தில் ‘‘**ஆபிரகாமின் மடி**’’ என்ற கனம் பெற்றார்!

ஆபிரகாம் கர்த்தருக்கே **“கடனாளி”** யாக சம்மதித்தினால் அவரது வாரிசில் யூதா கோத்திரத்தில் மீட்பின் இரகசியம் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது.

ஆபிரகாம் **தன் ஒரே பேறான குமாரனை பலியிடச் சம்மதித்து** தேவனின் ஒரே பேறான குமாரன் பலியாகப் போவதற்கு ஓர் **வெள்ளோட்டம்** நடத்தினர். மனுஷ குலத்திற்கு மிக மிக அவசியமான **தேவ இரகசியம்** வெளிப்பட்டதை திறந்தார்.

**இரகசியம்** என்ற வார்த்தையை அதிகமாக பயன்படுத்தியது பரிசுத்த **பவுல் அப்போஸ்தலனே** ஆகும். புதிய ஏற்பாட்டில் 28 இடங்களில் வரும் இந்த வார்த்தை 21 முறை பவுலின் கடிதங்களில் இடம்பெறுகின்றது. **தேவ இரகசியம்** என்பது என்ன? மனிதராகிய நமக்குத் தெரியாதது எதுவோ அத்துடன் நம்மை இணைப்பதே **தேவ இரகசியம்.**

கொலோசெயர் 2:2 கூறுவது போல் அது **பிதாவாகிய தேவனுக்கு** (அறியபடாததற்கும்) கிறிஸ்துவுக்கும் **(அறியப்படக் கூடியதற்கும்)** உள்ள **இரகசியம்!** பாவிகள் **அந்த இரகசியத்தை அறிய** வேண்டுமானால் **இயேசுவை அறியவேண்டும்!** மீட்கப்பட்ட பாவிகளாக மாறுவதற்கு இதுவே **இரகசியம்!**

*ஆதியாகமம் 3ம் அதிகாரம் முதல்*

**பிசாசின் யுக்தியில் விழுந்து**விட்ட பாவிகளை **மீட்கப்பட்ட பாவிகள்** என்ற வரிசையில் நிறுத்த **தேவ பக்தியின் இரகசியம்** ஆபிரகாம் மூலம் உலகிற்கு வெளிப்பட்டது!

அந்த இரகசியம் என்ன என்பதை 1 தீமோத்தேயு 3:16 கூறுகின்றது

**தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்** ஆவியிலே நீதியுள்ளவரென்று **விளங்கப்பட்டார்** தேவ தூதர்களால் **காணப்பட்டார்.**

புற ஜாதிகளிடத்தில் **பிரசங்கிக்கப்பட்டார்,** உலகத்திலே **விசுவாசிக்கபட்டார்,** மகிமையிலே **ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்.**

**தேவனில்** தேவனாக, மனிதனில் மனிதனாக இரு மிக வேறுபட்ட தன்மைகளை தன்னில் ஒருங்கே பெற்ற **இரட்சகராகிய இயேசு கிறிஸ்து** பாவிகளாகிய மனிதர்களை தன்னில் இணைத்து ஒருவராலும் அறியக்கூடாத, அறிய முடியாத இரகசியமாக பிதாவாகிய **தேவனுடன் ஐக்கியப்படுத்துவதே தேவ இரகசியம்!** இதுவே இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் எனப்படும் இரகசியம்! இந்த **இரகசியத்தை** அறிந்தவர்கள் அறியாதவர்களும் இதனை அறிந்துவிட வேண்டும் என்ற மனப்பான்மையுடன் வாழ்ந்தால் கர்த்தருக்கே ''**கடனாளி**''களாக வாழ்வார்கள், பல **நன்மைகளைப்** பெறுவார்கள் **ஆசீர்வதிக்கப்படுவார்கள்!**

உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தியதும் மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியம் (1கொரி 2:7) ஆபிரகாம் மூலம் நமக்குக் கிட்ட காரணம் ஆபிரகாம் **சுவிசேஷத்தின் இரகசியத்திற்கு** (எபி 6:20) ''**கடனாளி**''யாக மாறியதினால் அல்லவா!

☐ *ஆபிரகாமிற்குப் பின்னால் சுவிசேஷத்தின் கடனாளியாக*

கர்த்தரால் அழைக்கப்பட்டவர் **மோசே** ஆவார்! அழைத்தவுடன் ஆபிரகாம் சம்மதித்தார்! ஆனால் **மோசேயோ** அழைத்தவரையே **கேள்விகேட்டார்! சாக்குப்போக்குகள்** சொல்லி மீதியிருந்த **40 வருடங்களையும்** மீதியானியருடன் ஓர் மீதியானியனாக மாறி வாழ்க்கையை முடித்தவிட விரும்பினார். அதனால் **கர்த்தர் மோசேயின் மேல் கோபங்கொண்டார்,** யாத்.4:14

மனிதரின் அழைப்பிற்குச் சாக்குப்போக்குச் சொல்லித் தப்பிடலாம், ஆனால் கர்த்தர் அழைக்கும்போது அத்தனை எளிதாக தப்பிச்செல்லமுடியாது, **தேவ கோபம்** சந்திக்கும் என்பதை மோசே அறிந்தவுடனே சம்மதித்தார்! **யாரையாகிலும் அனுப்பும்** என்று வெறுப்புடன் கூறியவர் (யாத் 4:13) கர்த்தருக்குக் ''**கடனாளி**''யாக மாறுவது என் பொறுப்பு என்றார்! பிசாசின் பிடியிலிந்து மனிதரை வெளியேற்ற தேவன் வகுத்த உலக இரட்சிப்பின் திட்டத்திற்கு ஓர் **வெள்ளோட்டமாக** இஸ்ரவேலரை எகிப்திலிருந்து **வெளியேற்றினார்.**

***கர்த்தருக்கே "கடனாளி"களாக மாறுகிறவர்கள்***

கர்த்தரிடம் பெரும் நன்மைகளை ஆசீர்வாதங்களை பெறுவதற்கும் கடன் பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்!

அபிரகாம் கர்த்தருக்குக் ''**கடனாளி**''யாக மாறிய நாள் முதல் அனைத்துத் துறையிலும் பெரும் நன்மைகளைப் பெற்றார். மகா மேன்மை அடைந்தார்! அதே போன்று **மோசே** கர்த்தருக்குக் ''**கடனாளி**'' யாக மாறியது முதல் மகா நன்மைகளை பெற்றார்

**சீனாய்** மலைமுதல் **மறுரூப மலைவரை** மகா மேன்மைகளை கண்டார்!

☐ கர்த்தருக்குக் ''**கடனாளி**''யாக மாறி கர்த்தரிடம் பற்பல நன்மைகளையும் பெற்று அனுபவிக்கத் துவங்கிய பின்னர் ''**கடனாளி**'' துரோகியானால் மெத்தையில் ஏறிய பின்னர்

ஏணியை தட்டி விடுவதைப் போலாகிவிடும். சந்திக்கபோவது **தேவ கோபமாகி** விடும். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு **எசேக்கியா இராஜா!**

# ஏசாயா ராஜாவின் ஆரம்பமும் முடிவும்

29 வருடங்கள் (கி.மு 726- 697) **யுதாவின் சிம்மாசனத்தில்** அமர்ந்தவன்! ரெகோபெயாம் துவக்கம் (அத்தாலியாள் உட்பட) **யூதாவை ஆண்ட 20 பேரில் கர்த்தரை உத்தமமாகப்** பின்பற்றிய **ஆசா**(2 நாளா 12:2) **யோசபாத்** (2 நாளா 17:4) போன்றவர்களின் **வரிசையில் ஓர் உத்தமனாக** (2 நாளா 29:2) இருந்தவன். தகப்பனால் பூட்டப்பட்ட தேவாலயத்தின் **கதவுகளை திறந்தவன்.** மறக்கப்பட்டுபோன **பஸ்கா ஆசரிப்பை** அமுலுக்குக் கொண்டுவந்தவன். வடக்கு,தெற்கு என்று இரண்டு துண்டாகிப்போன **யாக்கோபின் பிள்ளைகளை** பன்னிரு கோத்திரங்களை **எழுப்புதலுக்குள் கொண்டுவந்து** ஆவிக்குள் ஒன்றாக்கியவன். 270 வருடங்களுக்கு முன் மரித்த **சாலமோனின் நீதிமொழிகளை** பேர்த்தெழுதியவன். 31 அதிகாரங்களைக் கொண்ட **நீதிமொழிகளின்** புத்தகத்தில் 25 முதல் 30 அதிகாரங்கள் **எசேக்கியா** பேர்த்தெழுதியவை! (நீதி 25:1 பார்க்க) . இவன் காலத்தில் வாழ்ந்த **ஏசாயா, ஓசியா, மீகா** என்ற **தீர்க்கதரிசிகளுடன் ஆகும்.** நெருங்கிய ஐக்கியம் வைத்தவன். **எபிரேய மொழிக்கு எழுத்துகளை** (Old Hebrew Alphabet) **வழங்கியன் இவன்தான்.**

**அவனது ஜெபம்** வானத்திலிருந்து ஒரு **தேவ தூதனை வரவழைத்தது** எசேக்கியாவின் சார்பில் அந்த தூதன் **சனகெரிப்பின்** 1,85,000 **வீரர்களின் கழுத்தை சங்கரித்தான்** (ஏசாயா 37:36). **வாழ்வின் அற்றம் வரை வந்த** அவனுக்கு அவனது விண்ணப்பம் **பதினைந்து வருடங்களைக் கூடக் கூட்டிக் கொடுத்தது** (ஏசாயா 38:5).

**அவனது மன்றாட்டு** ஆகாசுடைய **சூரிய கடிகாரத்தை** பத்து பாகை (சுமார் 15 நிமிடங்கள்) **திருப்பிவிட்டது** (ஏசாயா 38:7). **அத்தனை நெருக்கமாகக் கர்த்தருடன்** வாழ்ந்தவன் எத்தனையோ நன்மைகளை கர்த்தரிடம் பெற்றுக் கொண்டே வளர்ந்தவன் **பிச்சையாக பெற்ற அடுத்த 15 வருடங்களும் கர்த்தருக்கு மட்டுமே ''கடனாளி''** யாகவாழவேண்டும் என்பதில் **தடம் புரண்டுவிட்டான்.**

**அவனைப் பார்ப்பதற்குத்** தூரமான பாபிலோனிலிருந்து வந்த **பார்வையாளர்களுக்கு கர்த்தரை காட்டவில்லை** தன் பரம **வைத்தியரை** அறிமுகம் செய்யவில்லை. அவர்களுக்கு **கர்த்தருடைய நாமத்தை** பிரஸ்தாபிக்கவில்லை, அவர்களுக்கு **கர்த்தரை பகிரங்கப்படுத்தவில்லை,** பெற்ற **அற்புத சுகத்தை** கூறி **ஏசாயாவின்** தலைமையில் **ஓர் சாட்சிக் கூட்டம் நடத்தவில்லை,** சுவர் பக்கமாய் திரும்பி தன் மாளிகையை **ஜெபமனையாக்கியவன்** அவன் ஜெபத்தை கேட்டு தன் ஆயுளை அதிகமாக்கிய தேவனின்

அற்புதத்தை பெற்ற அரண்மனையை **பார்வையாளர்களுக்கு** ஓர் **பொருட்காட்சி** சாலையாக்கியவன் **அவன் பண பெலத்தையும்,** கை பெலத்தையும் வந்தவர்கள் பார்த்து ரசித்தார்களே தவிர. **கர்த்தரையோ ருசிக்கவில்லை,** அவர்கள் அந்த அரன்மனையில் கண்டது **எசேக்கியாவை மட்டும்தான்.** ஆனால் கர்த்தரின் ''**கடனாளி**'' யை அல்ல.

சகோதரனே, சகோதரியே

**சுகம், பெலன், ஆரோக்கியம்** உனக்கு இருக்குமென்றால் அது எதற்கு? கர்த்தருக்குக் ''**கடனாளி**''யாக சுவிசேஷ ஊழியத்திற்கக **உழைப்பதற்கு** அல்லது **அலைந்து திரிந்து** அநேகரை நீதிக்குட்படுத்துவதற்கு! **பண, வசதி,** வரவு உனக்கு இருக்குமென்றால் அது எதற்கு? கர்த்தருக்குக் ''**கடனாளி**''யாக சபைக்கும் **சுவிசேஷ ஊழியத்திற்கும்** அள்ளிக் கொடுப்பதற்கு!

**பணிதளங்களை** திறப்பதற்கு, **சபைகளைக்** கட்டுவதற்கு! **தாலந்துகளும், வேத அறிவும்** உனக்கு இருக்குமென்றால் அது எதற்கு! கர்த்தருக்கே ''**கடனாளி**'' யாக அவைகளை தேவையான இடங்களில் மக்கள் இதயங்களில் தூவுவதற்கு! 30,60,100 என்று ஆத்துமாக்களை சம்பாதிப்பதற்கு

**எசேக்கியா** சம்பாதித்ததோ **தேவ கோபத்ததையே!** தன்னிடம் இத்தனை நெருக்கமானவன் பாபிலோனிலிருந்து வந்த பார்வையாளர் முன், அந்த **பாகால்** வணக்கக்காரர் முன் **யெகோவாவே தேவன்** என்பானோ அல்லது இரண்டு சிந்தனைகளினால் குந்தி, குந்தி நடப்பானோ என்பதைப் பார்க்க **கர்த்தர் அனுமதித்த சோதனையில்** எசேக்கியா **தோல்வி கண்டான்.** தன்னை தூரப்படுத்தியவனை **கர்த்தர் தம்மைவிட்டுத் தூரப்படுத்தனார்.** கர்த்தர் **எசேக்கியாவைக் கைவிட்டார்** என்று வசனம் கூறுகின்றது.

**பாபிலோன் பிரபுக்களின் ஸ்தானாபதிகள் தேசத்திலே நடந்த அற்புதத்தை கேட்க அவனிடத்தில் அனுப்பட்ட விஷயத்தில் அவன் இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவளைச் சோதிப்பதற்காக தேவன் அவனை கைவிட்டார்** (2 நாளா 32:31). இது பழைய ஏற்பாட்டு நூல்களில் **மிகச் சிறந்த ஒருவனின் சோக முடிவு ஆகும்!**

## புதிய ஏற்பாட்டில் கர்த்தருககு கடனாளிகள்

☐ மேலும் **புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தில்** கர்த்தருக்கு ''**கடனாளி**'' என்பதை மறந்த 9 **பேர்களைப்** பாருங்கள் லூக்கா 17:11-19 வசனங்களில் ஓலமிட்ட **10 குஷ்டரோகிகளை** பாருங்கள் ( அதில் **ஒன்பது** பேர் யூதர், ஒருவன் சமாரியன்). அவ்வித வியாதிக்கு **மருந்தே இல்லாத** அந்நாட்களில் **இயேசு** ஐயரே என்று அவர்கள் கெஞ்சியவுடன் **சுகம் தாரும்**

என்று அவர் முன் அவர்கள் விழுந்தவுடன் நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்தவர் **அவர்களுக்கு இரங்கினார்.** குஷ்ட ரோகிகளான உங்களை மக்களால் **ஊரைவிட்டு வெளியே அனுப்பப்பட்டவர்களே!** நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் உடனே நீங்கள் **ஊருக்குள் போகலாம்** இனி தீட்டுபட்டவர்கள் அல்ல. இனி நீங்கள் **ஆலயத்தில் பிரவேசிக்கலாம்** நீங்கள் **ஆசாரியனை** சந்திக்கலாம் என்று ஆணையிட்டார். **ஆணையிட்டவருக்கு** அவர்கள் அத்தனை பேரும் ''**கடனாளி**'' கள். ஆனால் அதில் **ஒன்பது பேர்** கேட்டது கிடைத்து விட்டது என்றவுடன் **கொடுத்தவரை மறந்தார்கள்,** ஊருக்குள் அல்ல, உலகத்திற்குள் புகுந்தார்கள், உலகோடு உலகமானார்கள் 10 பேர்களில் **ஒரே ஒருவன்** மட்டுமே அதுவும் யூதர்களால் வெருக்கப்பட்ட **சமாரியன் மட்டுமே** தான் தங்களுக்கு வியாதி ஆரோக்கியமானதைக் கண்டு திரும்பி வந்து உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினான் (லூக்கா 17:15,16)

இந்த சம்பவத்தில் பத்து பிணியாளிகளில் **ஒரே ஒருவன்** மட்டுமே கர்த்தருக்கு ''**கடனாளி**'' யானான்.

மற்றவர்கள் **சுயநலவாதிகளானார்கள்** கர்த்தர் அந்த ஒருவனால் **மகிழ்ச்சி யடைந்தார்.** அந்த ஒன்பது பேரால் **மனவருத்தும்** அடைந்தார். அப்பொழுது இயேசு சுத்தமானவர்கள் பத்து பேர் அல்லவா, மற்ற **ஒன்பது பேர் எங்கே?** தேவனை மகிமைப்படுத்துகிறதற்கும், இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக் **காணோமே என்றார்** (வச 17,18) ஒன்பது ''**கடனாளி**'' களைக் காணோமே என்றார் **காணோமே என்பது** வருத்தம் மட்டும் அல்ல **தேவகோபமும்** கூட **காணோமே** என்று அவர் சொன்ன வேளையில்தானே அந்த ஒன்பது பேரும் மறுபடியும் **குஷ்டரோகிளாக மாறினார்கள்** என்று பிரபல **வேதவல்லுநர்** ஒருவர் **கூறியிருக்கிறார்.** பரிசுத்த **வேத புத்தகத்தில் அவ்விதம் கூறாப்படாவிட்டாலும்** சுகம் பூரணமாவதற்கு இயேசுவிடம் திரும்பிவந்து அவர் பாதத்தில் ''**கடனாளி**'' களாக அவர்கள் விழுந்திருக்க வேண்டும். நீ **எழுந்து போ உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது** என்று சமாரியனுக்குக் கொடுக்கப்பட்ட **இறுதி ஆசீர்வாதத்தை அந்த ஒன்பது பேரும்** பெற்றிருக்க வேண்டும். ஆலய ஆராதனைகளில் கடைசி ஆசீர்வாதமே மிக முக்கியமானது. அந்த ஒன்பது பேருக்கும் இயேசுவின் கடைசி ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. ஆம் கர்த்தரிடம் ''**கடனாளி**'' களாக மாறாவிட்டால் இருப்பதையும் இழப்பார்கள்.

பிரியமானவர்களே!

சுவிசேஷத்தை பிரசங்கிக்காவிட்டால் எனக்கு ஐயோ என்று பவுல் கூறுவது என்ன? எனக்கு **சாபம்** என்பதாகும். கர்த்தரிடம் நன்மைகளைப் பெற்ற பின்னர் கர்த்தருக்கே ''**கடனாளி**'' களாக வாழாதவர்கள் அநேகர் உண்டு! அவர்கள் முடிவு சோக முடிவுகளே!

கர்த்தருக்குக் ''**கடனாளி**'' என்பது சுவிசேஷ ஊழியத்திற்குக் ''**கடனாளி**'' என்பதே ஆகையால் சவிசேஷத்தை அறிவிக்கவிட்டால் **எனக்குச் சாபமே** என்று பவுல் **தன்னையே தான் எச்சரித்துக்** கொள்ளகிறார்! கர்த்தரால் பிரித்தெடுக்கபட்டவர்கள் உலகத்தில் வாழுவதற்கு காரணம் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகவே!

ஆம். விசுவாசிகள் அனைவரும் சுவிசேஷ ஊழியத்திற்கு ''**கடனாளி**'' கள். ஆகையால் பிரியமானவர்களே! பவுலைப் போன்று, நீங்களும் நானும் இயேசுவுக்குக் ''**கடனாளி**'' கள், பிதாவாகிய தேவனுக்குக் ''**கடனாளி**''கள். பரிசுத்த ஆவியானவருக்குக் ''**கடனாளி**''கள். சொல்லப்பட்டிராத இடங்களுக்குக் ''**கடனாளி**'' கள். நம்மால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு ''**கடனாளி**''கள்.

ஆகையால் இயேசு இராஜாவுக்கு ''**கடனாளி**'' களாக நீங்கள் இந்த உலகத்தில் வாழவேண்டும். ஓர் நாள் அவர் சமூகத்தில் நிற்கும் போது **நாங்கள் அப்பிரயோஜனமான** ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்ல வேண்டும், மகிழ வேண்டும்! ஆமென்!.

ஒருவர் கூட கெட்டுப் போகக்கூடாது என்ற சிந்தைகொண்ட பிதாவாகிய தேவனே, நீர் எங்களுக்காக தமது ஒரே பேறான குமாரனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட **எங்கள் அனைவருக்கும் அதே சிந்தையைத் தந்தருளும்.** காணாமல் போன ஆடுகளைத் தேடவும் கண்டுபிடிக்கவும் வந்த எங்கள் நல்ல மேய்ப்பரே ! தம்மை அறிந்த **எங்கள் அனைவருக்கும் அதே தரிசனத்தைத் தந்தருளும்.** மக்கெதோனியா வாருங்கள், பாருங்கள், தேவையை சந்தியுங்கள் கனவில் தோன்றி ஊழியனை விழிக்கச் செய்த ஆவியானரே அறியப்படாத இடங்களை குறித்து எங்கள் இதயங்கயைளத் துடிக்கச்செய்யும். **பர்னபாவையும், சவுலையும்** சுவிசேஷ வேலைக்காகப் பிரித்துவிடுங்கள், **அனுப்பிவிடுங்கள்** என்றவரே. **அந்தியோகியா** சபை போன்று **இந்தியாவின் சபைகளையும்** மாற்றியருளும்.பிசாசானவன் தன்னால் இயன்ற மட்டும் மனிதரின் மனதை கடினப்படுத்தும் நாட்களில் விசுவாசிகளையும், ஊழியர்களையும் சோம்பலிலும் சோர்விலும் பெலவீனப்படுத்தும் இந்நாட்களில் நாங்கள் எங்களால் இயன்றமட்டும் விழித்திருந்து ஜெபிக்க செய்யும். வேதத்தில் முகம் பதிக்க செய்யும் **சுவிசேஷ உழியத்தில்** முன்னாக நிற்கச் செய்யும். கிராமங்களை சுதந்தரிக்கச் செய்யும். பெலன் ஒடுங்குவதற்கு முன், வாசல்களை மூடுவதற்கு முன், **தேவ கோபம் ஊற்றப்படுவதற்கு முன்,** வருகை வருவதற்கு முன் எங்களால் இயன்ற மட்டும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தேவையுள்ள அனைத்து இடங்களிலும் அறிவிக்கவும், தெரிவிக்கவும் **சபைகளை** கட்டவும் அருள்செய்ய வேண்டும் என்று அருமை இரட்சகர் இயேசுவின் நாமத்தில் கெஞ்சுகிறோம்.

– ஆமென்.

## உலகங்குமுள்ள கிறிஸ்தவர்களுக்கு

# இஸ்ரவேல் பிரதமரின் நன்றிக் கடிதம்



**Mr. Benjamin Netanyahu**
*Isreal Prime Minister*

இஸ்ரவேலை அதரித்ததற்கு **CUFI** க்கு நன்றி. (Christian United for ISRAEL)

உங்கள் ஆதரவை நாங்கள் பராட்டுகிறோம். நாங்கள் உங்களுக்கு நன்றி கூறுகிறோம். உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களின் ஆதரவை நாங்கள் பாராட்டுகறோம். யூதர்களும் கிறிஸ்தவர்களும் இன்னும் பலர் ஒப்புக்கொள்வார்கள். இஸ்ரவேல் ஓர் அதிசயம், மத்திய கிழக்கின் ஒரு மாநிலம். ஜனநாயகத்தை நன்கு அறிந்திருக்கிறது. சுத்தமான ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் என்னவென்பதை அந்த மாநிலம் அறிந்துள்ளது. அதன் 70 ஆண்டு கால வரலாற்றில் பன்முகத்தன்மை கொண்டது. இங்கு ஜனநாயகம் பயப்படவில்லை, கிறிஸ்தவர்கள் மற்றொரு உண்மையும் அறிந்துள்ளனர். அதென்னவென்றால் கடந்த 3000 ஆண்டுகளாக ஜெருசலேம்தான் இஸ்ரவேலின் யூதர்களின் தலைநகரமாக இருந்து வந்திருக்கிறது. தற்போது 70 ஆண்டுகளாக ஜெருசலேம்தான் இஸ்ரவேலின் தலை நகரமாக உள்ளது. ஜெருசலேம்தான் எப்போதும் இஸ்ரவேலின் தலைநகராக இருக்கும்.

அன்பு சகோதர, சகோதரிகளே!

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு நாடு இஸ்ரவேல். இங்கு கிறிஸ்தவர்கள் வாழ்வது மட்டுமல்ல. அவர்கள் செழித்து வளர்கிறார்கள். கிறிஸ்தவ புனித ஸ்தலங்கள் பாதுகாக்கப்பட்டு, கிறிஸ்தவ வழிபாடுகள் அச்சமின்றி மேற்கொள்ளப்படுகின்றன. இஸ்ரவேலில் கிறிஸ்தவர்கள் நம்ப முடியாத உயரங்களை அடைந்துள்ளனர். எங்களிடம் ஒரு கிறிஸ்தவ அரேபியர் கூட இருக்கிறார். அவர் 15 ஆண்டுகளாக எங்கள் உச்ச நீதிமன்றத்தில் இருந்தார். எங்களிடம் மற்றவர்களும் இருக்கிறார்கள். ராஜ தந்திரிகள், தொழில் அதிபர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மருத்துவர்கள்.... எல்லாரும் எல்லா பகுதிகளிலும் இருக்கிறார்கள். இஸ்ரவேல் சமூகத்திற்கு மகத்தான பங்களிப்பை வழங்கிய கிறிஸ்தவர்களின் ஏராளமான எடுத்துக்காட்டுகள் மற்றும் இஸ்ரவேலின் வெற்றியின் பெரிய அதிசயத்தை பகிர்ந்து கொள்கின்றன. இஸ்ரேலிய சமுதாயத்திற்கு மகத்தான பங்களிப்பை வழங்கிய கிறிஸ்தவர்களின் ஏராளமான எடுத்துக்காட்டுகள் மற்றும் இஸ்ரேலின் வெற்றியின் பெரிய அதிசயத்தை பகிர்ந்து கொள்கிறேன்.

துர்திஷ்ட வசமாக சில நாடுகள் கிறிஸ்தவர்களை மதிப்பதில்லை. ஈரானில் கிறிஸ்தவர்கள் கொடூரமாக துன்பப்படுத்தப்படுகிறார்கள். கிறிஸ்தவ மத போதகர்கள் பல வருடங்களாக அங்கு சிறையில் இருந்துள்ளனர். இப்பொழுது இது அனைவருக்கும் கவலை அளிக்கக்கூடிய ஒரு பிரச்சனை. நான் தெளிவாக சொல்கிறேன். ஈரானில் துன்பப்படும் கிறிஸ்தவர்களுடன் இஸ்ரேல் முழுமையான ஒற்றுமையுடன் நிற்கிறது. நான் ஆச்சரியப்படுகிறேன். ஈரானில் கிறிஸ்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படும்பொழுது மற்றவர்கள் ஏன் அமைதியாக இருக்கிறார்கள் என்று என்னால் இதைச் சொல்லமுடியும் . இஸ்ரவேலின் நாங்கள் அமைதியாக இருக்கமாட்டோம், மற்றும் துன்பப்படும் ஈரானிய மக்களின் அழுகையை நான் தொடர்ந்து எழுப்புவேன்.

கிறிஸ்தவர்கள், மாணவர்கள், பத்திரிகையாளர்கள், ஈரானிய ஆட்சி மத்திய கிழக்கில் இருள் சூழ்ந்துள்ளது. இஸ்ரவேல் ஒரு புள்ளி, நல்ல செய்தி என்னவென்றால் இஸ்ரவேல் ஒருபோதும் வலுவாக இருந்தில்லை, உலகெங்கிலும் உள்ள நாடுகள் இஸ்ரேலுக்கு எதிராக படையெடுத்து வருகின்றனர். நமது தெற்கு எல்லையில் வெறிபிடித்த பயங்கரவாத குழுவான ஹமாஸ் யூதர்களின் இனப்படுகொலைக்கு அழைப்பு விடுக்கிறது. வடக்கில் ஹெல்புல்லா இஸ்ரேலை குறி வைத்து பெரும் அளவிலான ஏவுகனைகளை குவித்து வருகிறது. ஈரான் வெளிப்படையாக இஸ்ரேலை அழித்தொழிக்க அழைப்பு விடுக்கிறது. ஆனால் இஸ்ரேல் மிகவும் வலிமையானது. கொடுமைப்படுத்துபவர்கள் மற்றும் கொடுங்கோளர்கள் எங்களை மிரட்ட ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். நாம் செழிப்பாகவும் அமைதியாகவும் இருக்க எப்பொழுதும் நம்மை தற்காத்துக் கொள்வோம். இஸ்ரேலின் பலம் நமது ராணுவத்தால் மட்டுமல்ல அது நமது ஒற்றுமையினாலும் கூட. மற்றும் உலகம் முழுவதும் உள்ள உங்களைப்போன்ற நண்பர்களின் ஒற்றுமையும் எப்போதும் இஸ்ரேலுடன் இருப்பதற்கு நன்றி. நீங்கள் உண்மையிலேயே உலகின் சிறந்த நண்பர்களில் ஒருவர். அந்த நட்பை நான் மதிக்கிறேன் மற்றும் உங்கள் ஒற்றுமையை பாராட்டுகிறேன். இஸ்ரேலுடன் நீங்கள் இருப்பதற்கு நன்றி. உண்மையுடன் இருக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி.

– **நெதன் யாஹூ**, இஸ்ரேல் பிரதமர்

இந்த கடிதத்தை படித்தவுடன் மனதுக்குள் அவ்வளவு மகிழ்ச்சியடைந்தேன். காரணம், கிறிஸ்துவை பகைத்தவர்கள், **இவனை** அகற்றும் **பரபாசை** எங்களுக்கு விடுதலைச் செய்யும் என்றவர்கள், சிலுவையில் அறைந்து கொன்றப்பின்பும் கல்லறையை சீல்வைத்து காவல் காத்தவர்கள். இன்னும் சுருக்கமாய்ச் சொன்னால். புதிய ஏற்பாட்டை தொடுவதே பாவம் என நினைக்கிறவர்கள். ஆதி அப்போஸ்தலர்களைக் கொன்றழித்த இந்த **யூதர்கள்** இன்றைக்கு உலகெங்கிலும் உள்ள **கிறிஸ்தவர்களைப்** பாராட்டுகிறார்கள். உங்களுக்கு மிகவும் **நன்றிக்கடன்பட்டிருக்கிறோம்** எனக்கூறும்போது நமக்கு அவ்வளவு மகிழ்ச்சியாகயிருந்தது. இதெல்லாம் பார்க்கும்போது **கர்த்தருடைய வருகை** சமீபமாயிருக்கிறது என்பதும் மட்டும் நமக்கு தெரிகிறது. நம் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தமாவோம். தேவ கிருபை உங்களைவரோடும் இருப்பதாக. ஆமென்.



# டாக்டர் புஷ்பராஜ் அவர்களின்
# பணித்தள விஜயம்

கிராம எக்காளம்

உலகின் பல பகுதிகளுக்குச் சென்று சுவிசேஷம் அறிவித்து வரும் தேவ ஊழியர் டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் 1991ம் வருடம் நாங்கள் தங்கியிருந்த ஆஞ்சி என்ற கிராமத்திற்கு வந்தார்கள். வர்தா இரயில் நிலையத்தில் இறங்கி அங்கிருந்து சுமார் 80 கி.மீட்டர் தொலையில் உள்ள யவத்மால் என்னும் சிறிய டவுனில் உள்ள (Yavatmal College of Leadership Training) என்ற வேதாகக் கல்லூரி செல்வதற்காக வர்தா பஸ் ஸ்டாண்டு வந்துள்ளார்கள்.

ஒரு நாள் முன்கூட்டியே வந்துவிட்டபடியால் இங்குள்ள ஏதாவது ஒரு பணித்தளத்தையும். ஊழியர் குடும்பத்தையும் சந்திக்கலாமே என முடிவு செய்துள்ளார்கள். புதிய இடம் மொழி தெரியாது ஆனால் ஒரு திட்டமான முடிவுடன் பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில் ஒரு CSI ஆலயத்தை பார்த்ததும் அங்கு சென்று குருவானவரிடம் பேசியிருக்கிறார்கள். (ஆங்கிலத்தில் பேசியிருக்கலாம்) அவர் இங்கிருந்து 17 கி.மீட்டர் தொலையில் ஆஞ்சி என்ற கிராமம் இருக்கிறது. அங்கே தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு மிஷனரி குடும்பம் இருக்கிறார்கள் என்று சொன்னதும். நான் அவர்களை சந்திக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள் .

உடனே பாஸ்டர் எதிரில் உள்ள பஸ் ஸ்டான்டில் வந்து பஸ் ஏற்றிவிட்டு. கண்டக்டரிடம் இவர்களை ஆஞ்சியில் இறக்கி விட்டுவிடுங்கள் என்று சொல்லியிருக் கிறார். அதன்படியே ஆஞ்சியில் வந்து இறங்கி பஸ் ஸ்டாண்டில் அரைகுரையாக விசாரித்து தமிழ் என்ற வார்த்தையைக் கேட்டவுனே அங்குள்ளவர்கள் உதவியுடன் வீடு வரைக்கும் வந்து விட்டார்கள். அன்று லோசாக மழை துறிக்கொண்டிருந்தது. திடீரென்று நான் ஜன்னலைத்திறந்து பார்த்த போது எங்கள் வீட்டின் முன்பகாக மரத்தடியில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். தோளில் ஒரு

பை காலில் ஒரு சாதாரண செருப்பு. அவர்களுடைய எளிமையான தோற்றத்தைப் பார்த்ததும் என்னுடைய மனதிலே உடனடியாக தோன்றியது. இவர் ஒரு தேவனுடைய ஊழியக்காரர் என்பது தான். மிகவும் அமைதியாக நின்றுகொண்டிருந்ததார்கள். தமிழ்காரர் மாதிரிதான்தெரிகிறது என்று நினைத்துக்கொண்டு. கதவைத் திறந்தேன், என்னைப் பார்த்ததும் அவர்கள் கைகூப்பி வணக்கம் சொன்னதும் நான் உடனே ஐயா நீங்கள் யார் . என்று கேட்டபோது அவர்கள் நான் டாக்டர் புஷ்பராஜ் என்றார்கள். நான் அதுவரை அவர்களைப் பார்த்ததில்லை. ஜாமக்காரன் பத்திரிகை ஆசிரியர் டாக்டர் புஷ்பராஜ் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்வளவு தான் ஐயா வாருங்கள் என்று சொல்லி வீட்டிற்குள் அழைத்து சென்றேன். மிகவும் சிறிய வீடு 2 சிறிய அறைகள். அதில் எங்களுடன் 25 **கொலாம் ஆதி விசுவாசி ஏழைப் பிள்ளைகளும்** தங்கியிருக்கிறார்கள், என்னுடைய கணவர் வெளியூர் சென்றிருந்தார்கள்.

நாங்கள் தங்கியிருந்த அறையில் வந்து உட்கார்ந்ததும் இந்த இடத்திற்கு நீங்கள் எப்படி வந்தீர்கள் என்று கேட்டார்கள். உடனே எனக்கு என்னையறியாமலே அழுகை வந்துவிட்டது. நாங்கள் எப்படி **மகாராஷ்ட்ரா** வந்தோம், என்ன சூழ்நிலையில் இப்போது இருக்கிறோம் மற்றும் ஊரில் குடும்பத்தில் நான்பட்ட கஷ்டங்கள் என்னுடைய **மூன்று பிள்ளைகளும்** யவத்மால் மிஷனரி, **பள்ளி விடுதியில் சேர்ந்திருப்பதும்**, எல்லாவற்றையும் அழுது கொண்டே அவர்களிடம் சொன்னேன். பொறுமையாகக் கேட்டுக் கொண்டார்கள். ஒரு கப் தேனீர் மட்டும் குடித்தார்கள்.

அதன் பின்பு அவர்கள் நான் இங்கு வரும்போது ஆண்டவரே முன்பின் தெரியாத ஒரு மிஷனரி குடும்பத்தை சந்திக்க என்னை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறீர். அவர்களுக்கு நான் சொல்ல வேண்டிய காரியம் என்ன? என்று நான் ஜெபித்த போது கர்த்தர் எனக்கு எரேமியா 29ம் அதிகாரம் 11 முதல் 14 வரையான வசனங்களை எனக்கு நினைவுப்படுத்தினார் என்று சொல்லி அந்த வசனங்களை வாசித்து விட்டு ஜெபிக்க ஆரம்பித்தார்கள். மிகவும் அமைதியான குரலில் தான் ஜெபித்தார்கள். அவர்கள் ஜெபிக்கும் போது நானும் கண்ணீரோடு ஜெபித்தேன். **திடீரென்று அவர்களுடைய குரல் சிறிது வேகமாக மாறியது.**

அப்போது அவர்கள் நீங்கள் உபவாசிக்கிறீர்கள், இடைவிடாமல் ஜெபிக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய உபவாசமும், ஜெபமும், கண்ணீரும் எல்லாமே உங்கள் **3 பிள்ளைகளுக்காகத்தான்**. எப்போதுமே என் பிள்ளைகளை **எப்படி படிக்க வைப்பேன்?** எப்படி திருமணம் செய்து கொடுப்பேன். பிள்ளைகளுடைய எதிர்காலம் எப்படியிருக்குமோ

ஆண்டரே என்று எப்போதும் கண்ணீரோடு இருக்கிறீர்கள். 3 பிள்ளைகளையும் **நான் எடுத்துக் கொண்டால்** ஊழியத்தை உற்சாகமாக **செய்வீர்களா** என்று கர்த்தர் கேட்கிறார் என்று சொன்னார்கள். இதைக் கேட்டதும் என்னால் தாங்க முடியவில்லை. அழுது கொண்டே இருந்தேன். ஜெபத்தை முடித்ததும் அவர்கள் மிகவும் பொறுமையாக என்னிடம் நீங்கள் இனிமேல் உங்கள் பிள்ளைகளை நினைத்து கண்ணீர் வடிக்கக் கூடாது. உங்கள் குடும்பத்தைப் பற்றி கர்த்தர் ஒரு உன்னதமான நோக்கம் வைத்திருக்கிறார். அது இப்போது நமக்கு தெரியாது. உங்களுடைய பிள்ளைகள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் இன்றைக்கு உங்கள் குடும்பத்தையும், பிள்ளைகளையும் அற்பமாகவும் அவமானமாகவும் பேசினவர்களின் கண்களுக்கு முன்பாக கர்த்தர் உங்கள் பிள்ளைகளை உயர்த்தி ஆசீர்வதிப்பார்.

நம்முடைய கர்த்தர் ஊழியக்காரரின் பிள்ளைகளின் மேல் பரிதாபப்படுகிறார். ஆதலால் உங்கள் பிள்ளைகளுடைய எதிர்காலத்தை பற்றின கவலையை விட்டுவிட்டு உற்சாகமாக ஊழியத்தைச் செய்யுங்கள். கர்த்தர் ஆசீர்வதிப்பார் என்று கூறி எங்களையும் ஆசீர்வதித்து விட்டு சென்றார்கள். உறவினர்களும், உடன் பிறந்தவர்களும் மறந்து விட்ட நிலையில் கர்த்தர் தம்முடைய ஊழியகாரரை அனுப்பி எங்களை ஆறுதல் படுத்தினார். அதற்கு பின்பு நானும் என்னுடைய 3 பிள்ளைகளுடைய எதிர்காலத்தையும் கர்த்தரை எப்போதும் துதித்து ஸ்தோத்தரித்து சந்தோஷமாக ஊழியத்தை செய்ய ஆரம்பித்தேன். பல கிராமங்களுக்கு நடந்தும் **மிதி வண்டியிலும்** சென்று இயேசுவை அறிமுகம் செய்தோம். விலங்குகள் நிறைந்த காடு, மலைப்பகுதியில் இயேசுவை அறியாத மக்களை சந்தித்தோம். என் பிள்ளைகளை கர்த்தர் நடத்துவார். அவர் ஆசீர்வதிப்பார் என்று உறுதியாக விசுவாசித்தேன். ஏற்ற நேரத்தில் கர்த்தர் ஒவ்வொரு காரியங்களையும் 3 பிள்ளைகளுடைய வாழ்க்கையிலும் நன்மையும், செம்மையுமாக நடத்தித்தந்தார். படிப்பின் காரியங்களை திருமண காரியங்கள் பார்க்கிறவர்கள் ஆச்சரியப்படும்படியாக நடத்தினார். எல்லாவற்றுக்கும் மேலாக 3 பிள்ளைகளும் அவர்கள் இருக்கிற இடங்களிலே கர்த்தருக்கு சாட்சியாக விளங்கி வருகிறார்கள். எல்லா கனமும், மகிமையும் கர்த்தர்


சகோதரர் மற்றும் மிஷனெரிகளுடன் டாக்டர். புஷ்பராஜ் அவர்கள்



ஒருவருக்கே செலுத்துகிறோம். ஆமென்.

2024 ஜனவரி மாதம் நாங்கள் டாக்டர். புஷ்பராஜ் அவர்களுக்கு போன் பண்ணினோம். அவர்கள் 1991-ல் வந்ததை அவர்களிடம் கூறி இன்னொரு முறை த ாங்கள் எங்கள் பணித்தளத்திற்கு வந்து 3 நாட்கள் R.B.Mன் **கதீட்ரல் ஆலயத்தில்** செய்தி கொடுங்கள் என் அழைத்தோம். அவர்களும் உடனே சம்மதம் தெரிவித்து மார்ச் மாதம் 21ம் தேதி வெள்ளிக்கிழமையன்று சேலத்திலிருந்து புறப்பட்டு 22 ம் தேதி **சேவாக்கிராம** இரயில் நிலையத்திற்கு வந்தார்கள் 3 நாட்கள் **ஆஞ்சியில்** எங்கள் வீட்டிலேயே தங்கினார்கள். ஊழியத்தின் காரியங்கள், குடும்பத்தின் காரியங்களைக் குறித்துப் பேசியது மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது.

அடிக்கடி ஜெபிப்பதும், தேவ வார்த்தைகளையும் அவர்களது பலதரப்பட்ட 60 வருடத்திற்கு மேலான ஊழிய அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டது மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. உலகம் முழுவதும் தேவச்செய்தி வழங்கிட கர்த்தர் பயன்படுத்துகிற தேவ ஊழியர் எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்பட்டார்கள். 3 நாட்கள் **கதீட்ரல் ஆலயத்தில்** அநேக மக்கள் (ஊழியர்களும், விசுவாசிகளும்) கலந்து கொண்ட கூட்டங்களில் தேவச்செய்தி வழங்கினார்கள். அவர்களின் செய்தி முதல் தலைமுறை விசுவாசிகளுக்கு மிகவும் உதவியாக இருந்ததாக விசுவாசிகள் எங்களிடம் கூறினார்கள். மேலும் 24 ஆம் தேதி குருத்தோலை ஞாயிறு அன்று ஓலைகளைப் பிடித்து பவனியாக அனைவரும் வந்தது மிகவும் ஆனந்தமாக இருந்தது.

1991ல் வரும்போது நானும் எனது கணவரும் ஒரு ஊழியக்காரரும் R.B.M ல் இருந்தோம். இன்று தேவனது கிருபையால் **153 ஊழியர்கள், பெரிய பள்ளிகள், 2விடுதிகள்,** அநேக பால்வாடிகள் கட்டப்படுகிற **ஆலயங்கள்** 3 மாடி சேர்த்து 59 **ஆலயங்கள், ஆயிரக்கணக்கான பிள்ளைகள்,** விசுவாசிகள் சுமார் 1000 **கிராம வீட்டுச் சபைகளைத் தந்து** வல்லமையின் தேவன் ஆசீர்வதித்திருக்கிறார்.கர்த்தருக்கே மகிமை. இவைகளைப் பற்றி டாக்டர், புஷ்பராஜ் அவர்களிடம் பகிர்ந்து கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தினோம்.

மறுநாள் திங்கட்கிழமை மதியம் 2 மணியளவில் **சேவாகிராம்** இரயில் நிலையத்திலிருந்து சேலத்திற்குப் புறப்பட்டார்கள். 85 வயதிலும் கர்த்தர் அவர்களுக்கு ஞானம், பெலன், சுகம் கொடுத்து திரளான மக்களுக்கு ஆசீர்வாதமாக பயன்படுத்துவதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை!

மிஷனெரிப் பணியில்,
திருமதி. சாந்தி ஐசக்.

---

ஜாமக்காரன் :

நான் சந்தித்த ஆதிவாசி கிராம ஊழிய பணிதளம் ஆசீர்வதிக்கப்பட்டது. புலிகள் சரணாலய வன பகுதியில் எந்த மிஷனரி ஸ்தாபனமும் செல்ல தயங்கும் இந்த காட்டு பகுதிக்கு இதன் ஸ்தாபகரான ஐசக் ஈஸ்ரவேல் நல்ல பட்டதாரி , உயர் பதவி வகித்தவர். அதை முழுவதையும் விட்டுவிட்டு கர்த்தருக்காக முழு நேர பணியில் இறங்கி, ஆதிவாசி பிள்ளைகளை தங்க வைத்து அவர்களுக்கு கல்வி கொடுத்து, அத்தனைபேரும் இயேசுவை தெய்வம் என்று ஏற்றுக்கொண்டு, தன் கிராம மக்களுக்கும் அறிவித்து வருகிறார்கள்.

எங்கும் புலிகள் நடமாட்டம், மனித குரங்கு நான் தங்கியிருந்த வீட்டுக்குமுன் ஒரு ஆள் உயரத்துக்கு படுத்திருந்தது. இதன் மத்தியில் மஹாராஷ்ட்ரா மாநிலம் முழுவதும் ஏராளமான பள்ளிக்கூடங்கள், ஆராதிக்க ஆலயங்களை கட்டி முழுநேர பணியாளர்களை நியமித்து அற்புதமான இந்த ஊழியத்தை உண்மையுடனும் பாரத்துடனும் செய்யும் இந்த ஊழியத்தை பாராட்டுகிறேன்,

*இந்த ஊழியத்தை தாங்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள :*

**Rev. ISAAC ISREAL,**
Rural Blessing Mission,
ANJI (Moti), WARDA Dt.
**MAHARASHTRA - 442 103**

*காணிக்கை அனுப்ப வங்கி விபரம்*

| | |
|---|---|
| **வங்கி கணக்கு பெயர் :** | Rural BlessingMission, |
| **வங்கி பெயர் :** | Union Bank of India |
| **வங்கி கிளை :** | Union Bank of India |
| **வங்கி கணக்கு எண். :** | A/C No. 06341001007034 |
| IFSC Code : | UBIN0806340 |

# என் வாழ்க்கை முடிந்துவிட்டதா ?

டாக்டர் திருமதி **லில்லியன் ஸ்டான்லி**

நீட்டில் தோல்வியா? பிளஸ் டூவில் தேறவில்லையா? விரும்பின கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை? ஏதோ ஒன்றில் தோல்வி, வாழ்க்கையில் தோல்வியல்ல. தோல்வியை வெற்றியாய் மாற்றினவர்களால் வேதம் நிறைந்திருக்கிறது. பேதுரு செம்மையான எடுத்துக்காட்டு. ஆண்டவர் இயேசுவை மும்முறை மறுதலித்து கண்ணீர்விட்டவர். பெரும் அப்போஸ்தலனானது கடந்தகாலம். அவரைத் தலையிலே குட்டிக்கொண்டிருந்தாலும் அதைப் பின்தள்ளி, ஒன்று செய்கிறேன். பின்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவிக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். என்றெழுதினார். (பிலி 3:13,14) உங்கள் தோல்வி பிசாசிற்கு உங்களை அழிப்பதற்கு ஒரு தருணம். ஆனால் உங்களை கட்டி எழுப்பவும் உங்கள் வாழ்வை மலரச் செய்யவும் பிசாசை வெட்கப்படுத்தவும் அது ஆண்டவருக்கு ஒரு தருணம். ஆகவே ஆண்டவராது அரவணைப்பிற்குள் ஓடி விடுங்கள்.

போவாஸ் ரூத்தை பெண் பிள்ளை என்கிறார். மிக சீக்கிரமே அவளது வாழ்க்கை வெறுமையாயிற்று. அவளோ தன் யுத்தங்களை இறுதிவரை ஒரு கைபார்க்கும் வீரப் பெண்மணி. அடுத்து என்ன? என்பதே அவளது கேள்வி, தனக்கு சிறப்பாய் தோன்றி பாதையில் நடைபோடத் தீர்மானித்தாள். துவக்கம் வெறுமையாயில்லை. மாமியாரும் அவளும் வாய்க்கும் வயிற்றுக்குமாக வாழ்ந்தனர். ஆனால் அவள் சோம்பலாயில்லை. வெளியே போய் சாதாரண வேலை ஒன்றில் இணைந்தாள். மெல்லவே ஒளிக்கதிர்கள் அவர்களைச் சூழ்ந்திருந்த இருளுக்குள் நுழைந்தன. பின்பு கதிரவன் பிரகாசித்தான்.

அநேக வாலிபர் சீக்கிரமாக வாழ்க்கையில் நம்பிக்கை இழந்துவிடுகின்னர். வாழ்வை முடித்துக்கொள்கின்றனர் அல்லது குடி அல்லது போதை மருந்துகளின் பக்கமாய் திரும்புகின்றனர். வாழ்க்கை சுலபமல்ல. அது கடினமான பாதைதான். ஆனால் உறுதியுடன் முன் செல்வீர்களானால் ஒரு நாள் கொடி ஏற்றுவீர்கள். ஏழு பிசாசுகளோடும் மக்களால் ஒதுக்கப்பட்டும் மகதலேனா மரியாள் எத்தனையாய் நொந்து போயிருப்பாள் ! ஆனால் இயேசுவோடு கூட புதுவாழ்வை துவங்கி உயிர்தெழுதலின் நற்செய்தியை சுமந்து சென்ற முதல் மிஷனரியாக வேதத்தில் பெயர் பொறிக்கப்பட்ட பாக்கியவதியாக முற்றுப்பெற்றாள். வாழ்க்கையை கை கழுவி விடாதீர்கள். சகோதரனைவிட நெருக்கமான நண்பர் ஒருவர் நமக்குண்டு. அவர் கையில் வாழ்க்கையை ஒப்படைத்து விட்டு உங்களுக்குச் சிறந்ததாய் தோன்றும் பாதையில் நடைபோடுங்கள். சோர்பு உங்களை வெட்டி சாய்த்துவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையின் கோரங்களை மார்தட்டி எதிர்கொள்ளுங்கள். பயணம் தூரம்தான், ஆனால் ஒவ்வொரு நாளாக வாழுங்கள். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

வேண்டாம் வேண்டாம்!

1. **சோம்பல்** திடகாத்திமானோர் படுக்கையிலிருந்து பிந்தி எழுவதை காண்கிறேன். உதவி நாடி கையேந்தி நிற்கின்றனர். சாக்குப்போக்கு பல சொல்வர். பிந்தி எழுபவன் நாளெல்லாம் நொண்ட வேண்டும் என்பது பழமொழி, அதே சமயம் கோவிட் லாக்டவுன் சமயம் முறுக்கு விற்ற பொறியியலர்கயையும் கண்டிருக்கிறேன்.

அதிர்ஷ்டம் முத்தமிடும், தோல்வி என்னும் வீட்டை கட்டக் பயன்படுத்தப்படுவதான் சாக்குப் போக்கு எனும் ஆணிகள். சோம்பேறி சுறுசுறுப்பாவது அசாத்தியமல்ல, குதித்து எழும்புங்கள்.

2, **கை கழுவுதல் :** எல்லம் முடிந்தது என்ற முடிவுக்கு வரவே வராதீர்கள். நீங்கள் கைகழுவும் வரை வாழ்க்கை பிசாசுதான் உங்களை செயலிழக்கச்செய்வது. கர்த்தரை நம்பினால் அவர் உங்களை விட்டு விலகுவதுமில்லை, உங்களைக் கை விடுவதுமில்லை என்ற அவரது வார்த்தையை நம்புங்கள் (எபி 13:5) ஆயிரம் கிலோ மீட்டர் பயணம் முதல் அடியில்தான் துவங்குகிறது. ஆகவே உங்களையை தட்டி எழுப்பி. கர்த்தரை நம்பி முதல் எட்டை எடுத்து வையுங்கள்.

3, **சூழ்நிலையில் முழுகிப்போதல் :** யாபேஸ் மந்தாரமான சூழ்நிலையில் பிறந்தார். அவர் வளரும் பொழுது கடவுள் தன்னை ஆசீர்வதிக்க வேண்டினார். அவரது தாய் அவர் தனக்கு கழுத்தறுப்பாய் இருப்பார் என்று நினைத்தாள் (யாபேஸ் – வேதனை கொடுப்பவர்) அவரோ அவரது சகோரரிலும் சிறந்திலங்கி அவளுக்கு பெருமை சேர்த்தார் (1 நாளா 4:9,10) சூழ்நிலைகளைப் பார்த்து துவண்டு விடாதீர். தடைகளைத் தாண்டி முன்செல்லுங்கள். சூழ்நிலைகளுக்கு மேலெழும்பி யாபேசைப் போல குடும்பத்திற்கு பெருமை சேருங்கள்.

வாழ்க்கை நம்மை உருவாக்குவதில்லை. நாம்தான் வாழ்க்கையை உருவாக்குகிறோம். பாதக சிந்தை ஒருபோதும் நமது வாழ்வை சாதகமாக்கிவிடாது. எதிர்காலம் என்ன வைத்திருக்கிறது என்று அறிவதே விசுவாசம். முன்னால் பாதை தெரியவில்லையா ? பொறுத்திருங்கள். ஏற்ற நேரத்தில் அண்டவர் உங்களுக்கு வழியை திறப்பார். ரூத்தைப்போல நீங்களும் வாழ்க்கையில் கதிரவனைக் காண்பீர்கள்.

## மணிப்பூர்மீது மனமிரக்கம்

மணிப்பூரில் நடந்து வரும் இனவெறி மற்றும் மதவெறிக் கலவரமானது ஏறத்தாழ 65,000 நபர்களின் வாழ்க்கையைப் பாழாக்கி, பாதுகாப்பிற்காக அவர்களைக் காடுகளுக்குள் தப்பியோடச் செய்துள்ளது. 200க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ அலயங்கள் தகர்ப்பட்டுள்ளன. இவர்களுக்கு மறுவாழ்வு தந்திட Evangelical Fellowship of India (EFI) கிரமமதான நிவாரணப் பணி முயற்சிகளில் இறங்கியுள்ள்ளது. டெல்லியிலும் அசாம் மாநிலத் தலைநகர் கவுஹாட்டியிலுள்ள திருச்சபைகள் மூலம் இம்முயற்சி துவங்கியுள்ளது. அதிவிரையில் குறைந்தது 10,000 குடும்பங்களுக்காவது உதவ திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கு 3 கோடி ரூபாய்க்கும் கூடுதல் தேவை.

**இந்தியாவிற்குள்ளிருப்போர் காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் :**
Evangelical Fellowship of India (EFI) A/C No. 60800112565, Indian Bank, Guwahati IFSC IDIB000L518, PAN குறிப்பிட வேண்டும். தகவல் அனுப்ப வேண்டி முகவரி, <mail@efionline.org>

**வெளிநாட்டு காணிக்கைபகள்:** A/C No. 40084605807, State Bank of In, Main Branch, Delhi. IFSC SBIN0000691, SWIFTCode : SBININBB104, Manipur Relief என்ற குறிப்பிட்டு பட்டுவாடா தகவலை screen shot எடுத்து தெரியப்படுத்துங்கள்.



# சுதந்திர தின வாழ்த்துதல்

இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்க முயற்சித்த தியாகிகளுக்கும் இந்தியாவின் அனைத்து மாநிலத்தில் உள்ள ஆயிரக் கணக்கானவர் ஜாதி, மத, இன மொழி இன வேறுபாடின்றி அரும்பாடுகள்பட்டு பல கொடுமைகளை சகித்து நமக்கு சுதந்திரம் வாங்கித் தந்தனர். இந்தியாவிற்கு சுதந்திரம் பெற போராடிய வர்களின் சரித்திரங்களை படிப்பது நல்லது. அவர்களுக்காக அவர்கள் குடும்பத்துக்காக நாம் யாவரும் நன்றியுள்ளவர்களாக அந்த தியாக குடும்பங்களை நினைவு கூறி நம் கர்த்தரை துதிப்போம்.

ஜெய்ஹிந்த்

AUGUST - 2024

## Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

**Annual Subscription:**
India - Rs.60/
Foreign - Rs.600/

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.